**தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 04 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 25 ஆந் திகதியும் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 52,413,198 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அந்த வருமானம் ரூபா 227,776,384 ஆனமையால் ரூபா 175,363,186 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக முத்திரைக் கட்டணக் கணக்கு வைக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் சிட்டையிடல் ரூபா 9,461,500 ஆக இருந்த போதிலும், உள்படியான வருமானம் ரூபா 6,096,933 ஆகும். எனினும், நிதிக் கூற்றுக்களில் பெற வேண்டிய நிலுவை அனுமதிப்பத்திர வருமானம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | ஒரே கட்டிடத்தில் பல மாடிகள் காணப்பட்ட சந்தர்ப்பங்களின் போது அந்த கட்டிடம் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு வியாபார வரி பதிவேட்டில் உள்ளபோதும் ஒரு வியாபாரமாக மாத்திரமே பேணிச்செல்லப்பட்டிருந்தது. வாடகையாளர் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒருவரானமையால் இவ்வாறான பிரச்சினைகளை இனங்கண்டு சரி செய்யப்பட்டுள்ளது. |
| (iii) | தொலைத் தொடர்பு கோபுர வருமானம் ஆதன வரி வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தொலைத் தொடர்பு கோபுர வருமானம் தனிப்பட்ட ரீதியில் இனங்காணப்பட வேண்டும். | 2020 இன் கணக்குகள் தயாரிக்கும் போது தொலைத் தொடர்பு கோபுர வருமானம் தனியாக கணக்கீடு செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iv) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் (LLDF) கடன் கொடுத்தோர் ஆக ரூபா 1,320,538 தொகை காண்பிக்கப்பட்ட போதிலும், அந்த கடன் கொடுத்தோர் மீதி தீர்க்கப்பட்டிருந்தமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் அந்த பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் வைக்கப்பட வேண்டும். | கணக்குகளில் கைவிடப்பட்டுள்ள உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதிய கடன் கொடுத்தோர் மீதி 2020 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (v) | 2014 முதல் 2016 ஆம் ஆண்டிற்குரிய நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 2,147,098 தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்த காரர்களுக்காக செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் பணம் பொது வைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (vi) | மரண சடங்கு மண்டபமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,000,000 மூலதன செலவினம் வரை செய்யப்பட்டிருந்த போதிலும், உரிய செயற்திட்டம் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அந்த நிதி ஏற்பாடு சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் அத்திடிய மயான நிலத்திற்கு அடுத்தாலுள்ள மயான நிலம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக | நிதிக் கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

மாற்றப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (vii) | முத்திரைக் கட்டணம் மற்றும் கடன் கொடுத்தோரின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியில் 2019 சனவரி 01 இல் உள்ளவாறான ஆரம்ப மீதியாக பேரேட்டில் பதியும் போது மாற்றங்கள் ஏற்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டின் மீதியை நடப்பாண்டில் பதியும் போது சரியாக பதியப்பட வேண்டும். | முத்திரைக் கட்டண மீதி தவறுதலாக பேரேட்டில் பதியப்படாதிருந்த போதிலும், 2019 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக ஆரம்ப மீதியை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (viii) | 2018 ஆகஸ்ட் 03 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட ரூபா 7,968,000 பெறுமதியான சூரிய மின் கல உற்பத்தி முறைமை நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்தொன்றாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சபையிடம் உள்ள கோவைகளுக்கு இடையே இந்த பதிவேடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன், காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து விசாரித்து மிகுதி தகவல்களைப் பெற்று எதிர்கால நடவடிக்கைகளைச் செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 11 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளை அவற்றிற்குரிய பட்டோலைகள் / அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பீடு செய்யும் போது நிதிக்கூற்றுக்களில் ரூபா 13,850,065 தொகை குறைவாகவும், ரூபா 25,158,711 தொகை அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 இன் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த வேறுபாடுகளை கண்டறிந்து சீராக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 27,253,988 தொகையான 06 கணக்கு விடயங்களுக்காக | மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக | முத்திரைக் கட்டண மீதி தவறுதலாக பேரேட்டில் பதியப்படாதிருந்த |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | போதிலும், 2019 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக ஆரம்ப மீதியை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டின் போது ரூபா 101,280,234 தொகை செலவில் ஒப்பந்த அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட ஒவ்வொரு நிமாணங்களுக்காகவும் செலவிடப்பட்ட செலவினம் மற்றும் நிதி / பௌதீக செயல் முன்னேற்றம் போன்ற தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்விற்காக தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 218 ஆம் பிரிவு | நகர பிதாவினால் சபையின் பெறுவனவுகள் கொடுப்பனவுகள் தொடர்பான கூற்றை உள்ளடக்கி சபையின் நிர்வாகம் தொடர்பாக விரிவான அறிக்கையொன்று சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 218 மற்றும் 286(அ) பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த அறிக்கை அனேகமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையினால் எதிர் வரும் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட முடியும். |

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை

---

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | XIX ஆம் அத்தியாயத்தின் 1 ஆவது பிரிவு | சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களின் பட்டியலிடப்பட்ட மற்றும் பொது சேவை வீடுகள் என வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தாபனவிதிக் கோவையில் உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பான பகுதி வழிகாட்டியாக மாத்திரம் உரித்தாக்கப்பட்டிருந்தது. உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பாக சபை அங்கீகாரம் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்தமையால் அவ்வாறான தீர்மானம் ஒன்று இன்றி உத்தியோகபூர்வ இல்லங்களை வகைப்படுத்தல் மேற்கொள்ள முடியாதிருந்தது. |
| (ii) | VIII ஆம் அத்தியாயத்தின் 10.1 (அ) ஆம் பிரிவு | 07 உத்தியோகத்தர்களுக்காக 08 மணித்தியால காலங்களை மேவுகை செய்யாமல் 94 நாட்களுக்காகவும், 08 உத்தியோகத்தர்களுக்கு தின வரவு அல்லது வெளிச் செல்கை என்ற இரண்டில் ஒரு சந்தர்ப்பமும் இன்றி 121 நாட்களுக்காகவும், 05 உத்தியோகத்தர்களுக்கு கைவிரல் அடையாள இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச் செல்கை பதிவு இடப்படாத 22 நாட்களுக்காகவும் 1/20 படி வழங்கப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த உத்தியோகத்தர்களின் கடமைகளின் பிரகாரம் 08 மணித்தியால காலம் சபையில் கடமையில் ஈடுபடாதிருந்த சந்தர்ப்பங்கள் உள்ளன. அதனால் ஓட்டக் குறிப்பை அடிப்படையாகக் கொண்டு செயலர்வுகளில் பங்குபற்றுதல் மற்றும் விஷேட கலந்துரையாடல்களை நடாத்துதல் போன்றவற்றின் போது கைவிரல் அடையாள இயந்திரத்தில் பதிவிடக் கூடிய இயலுமை காணப்படாதிருந்தமையினால் அதற்குரிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

(இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

---

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 110 | இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட | நட்ட இழப்பு பதிவேடு இன்று வரையில் பேணிச் செல்லப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வேண்டும். | |
| (ii) | நிதிப் பிரமாணம் 177 மற்றும் 187(1) | கிடைக்கின்ற பணம் தினந்தோறும் அல்லது இயலுமான வரை தாமதமின்றி வங்கியில் வைப்பிலிட வேண்டிய போதிலும், மொத்த பணமும் அல்லது ஒரு பகுதி தாமதமான சில தினங்கள் தாமதமாகி சில தினங்கள் தாமதித்து வங்கியிலிடப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நாளாந்தம் கிடைக்கின்ற பணத்தை அன்றைய தினமே வங்கியில் இடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை நிறைவேற்றுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 188(2) | 2010 சனவரி முதல் 2014 சனவரி 20 வரையான காலப்பகுதியில் வைப்பிலிடப்பட்ட போதும், தேறாதிருந்த ரூபா 48,681 பெறுமதியான 05 காசோலைகள் மற்றும் 02 காசுக் கட்டளைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த 05 காசோலைகள் தொடர்பான தகவல்களை கோரி வங்கிக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (iv) | நிதிப் பிரமாணம் 371(2) மற்றும் (5) | 2000 முதல் 2016 வரையான காலத்தில் 79 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட முற்பணங்கள் தீர்த்து வைக்கப்படாதிருந்ததுடன், 10 நாட்கள் முதல் 388 நாட்கள் வரையான தாமதத்துடன் முற்பணங்கள் தீர்த்து வைக்கப்பட்ட 58 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (v) | நிதிப் பிரமாணம் 486(ஆ) மற்றும் (2) | 2002 முதல் 2019 வரை கிடைக்கப் பெற்ற ரூபா 284,876 பெறுமதியான 20 காசோலைகள் மதிப்பிழந்திருந்த போதிலும், இந்த காசோலைகளுக்காக பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணத்தை செலுத்துமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டதுடன், பணத்தை அறவிடுவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (vi) | நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் ரூபா 37,928,717 தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட | வருடாந்தம் வைப்புப் பதிவேட்டில் காணப்படுகின்ற காலாவதியான வைப்புக்களை |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டும். | வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

(ஈ) அரச நிர்வாக சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3:1 ஆம் பந்தி | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | இதற்காக ஈடுபடுத்துவதற்கு போதியளவான உத்தியோகத்தர் எண்ணிக்கை காணப்படவில்லை. அத்தியவசிய சந்தர்ப்பங்களின் போது எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. வாகனங்கள் பழையதாகும் போது எரிபொருள் அதிகமாக செலவாகின்றமையினால் மேலதிக எரிபொருள் விநியோகிப்பதற்கு ஏற்படுகின்றது. எதிர் காலத்தில் வசதிகளின் படி எரிபொருள் எரிவு பரிசோதனை செய்வதற்கு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(உ) அரச நிதிச் சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | முற்பணத்தை விநியோகிக்கும் போது ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கக் கூடிய பணம் ரூபா 100,000 இற்கு மேற்படாதிருக்க வேண்டிய போதிலும், சபை அதற்கு முரணாக 2019 சனவரி முதல் ஏப்ரல் வரையான காலத்தின் போது ரூபா 100,000 தொகையை விஞ்சி முற்பணம் விநியோகித்த 05 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நகர சபையின் சில பிரிவுகளில் நடவடிக்கைகளை பேணிச் செல்லும் போது (உதாரணமாக நகர கராஜில் அவசரமான பழுதுபார்த்தல்) இந்த முற்பணம் ரூபா 100,000 தொகையை விஞ்சியிருந்த போதும் உரிய முற்பணத் தொகை சரியாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.4.2 போதியளவான அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 188(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக 15 மாநகர உறுப்பினர்களுக்கு 04 சதவீத வட்டியில் 20 தவணைகளில் அறவிடும் அடிப்படையில் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக ரூபா 1,500,000 வழங்கப்பட்டிருந்தது. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த உறுப்பினர்களின் உறுப்பினர் சம்பளத்தில் இருந்து தவணைப் பணம் அறவிடப்படுகின்றது. |
| (ii) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185(2)(உ) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக கலப்பு வருமானம், ஆதன வரி மற்றும் திட்டமிடல் பிரிவுகளில் பொது மக்களுக்கு சேவை வழங்கியதால் 2019 சனவரி முதல் யூன் வரை உழைக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 1,181,197 தொகை முறையான அங்கீகாரம் இன்றி 27 உத்தியோகத்தர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நகர சபைக்கு வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு இந்த பதவியணியினர் மேலதிகமாக செயற்பட்டிருந்தனர். அதனால், நிதி செயற்குழுவின் ஊடாக சபையின் அங்கீகாரத்துடன் இந்த கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 284,365,691 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 299,585,345 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 இல் இருந்து கொண்டுவரப்படுகின்ற நேர் வரவு ரூபா 24,232 மற்றும் நேர் செலவு ரூபா 912,336 என்பவற்றை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நேர் வரவு மற்றும் செலவுகளை இனங்கண்டு தீர்த்து வைக்கப்பட வேண்டும். | நேர் வரவாக காணப்படுகின்ற ரூபா 24,232 தொகையை தீர்த்து வைப்பதற்கு வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்குகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | சீராக்கப்படும் என அறியத்தருகின்றோம். நேர் செலவாக காணப்படுகின்ற ரூபா 912,336 தொகை இன்று வரையில் ரூபா 14,837 தொகை குறைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | காசாளர் பிரிவிற்கு தினந்தேறும் கிடைக்கின்ற மொத்த பணமும் வங்கியில் இடப்படாது ஒரு பகுதி வங்கியில் இடப்பட்டு பெறப்படுகின்ற தொகையை விட அதிகமான பணம் அல்லது குறைவான தொகையொன்று வங்கியில் இடப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | நாளாந்தம் கிடைக்கின்ற சகல பணமும் வங்கியில் இடப்பட வேண்டும். | நாளாந்தம் கிடைக்கின்ற பணத்தை அன்றைய தினத்தில் வங்கியில் இடுமாறு உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | சபையின் பாதீட்டு மதிப்பீட்டை விஞ்சி மேலதிக நேர மற்றும் விடுமுறை தின சம்பளமாக ரூபா 5,089,502 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு எல்லையில் செலவினங்கள் செய்யப்பட வேண்டும். | வருடாந்த பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும், பொதுமக்களுக்கு சேவையை வழங்கும் போது வடிகாண்களை சுத்தப்படுத்தும் போதும், டெங்கு ஒழிப்பு செயற்திட்டங்கள் போன்றவற்றின் போதும் உரிய நிலைமையின் பிரகாரம் மேலதிக நேரத்தை அதிகரித்து வழங்குவதற்கு ஏற்பட்டிருந்தது. அந்த கொடுப்பனவுகள் செலவின தலைப்பு மாற்றப்பட்டு சரியாக நிறைவேற்றப்பட்டுள்ளது. |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 429,000 | 396,850 | 364,849 | 396,690 | 424,300 | 400,112 | 375,515 | 368,936 |
| (ii) | வாடகை | 10,829 | 14,069 | 14,707 | 13,925 | 19,035 | 16,217 | 12,638 | 16,548 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 22,650 | 23,159 | 15,608 | 91,084 | 23,500 | 45,731 | 16,895 | 86,815 |
| (iv) | ஏனைய வருமானம் | 23,000 | 12,130 | 7,843 | 13,490 | 300,000 | - | 184,543 | 514,918 |
| | | 485,479 | 446,208 | 403,007 | 515,189 | 766,835 | 462,060 | 589,591 | 987,217 |

## 2.3.3 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2019 ஆம் ஆண்டின் பாதீடு செய்யப்பட்ட மீண்டெழும் வருமானம் ரூபா 1,820,130,000 ஆகவும், உள்ளபடியான மீண்டெழும் வருமானம் ரூபா 1,647,231,326 ஆனமையால் ரூபா 172,898,674 தொகையை உழைத்துக் கொள்வதற்கு சபை தவறியிருந்தது.

## 2.3.2 வீதவரியும் வரியும்

### (அ) ஆதன வரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்காக சிட்டையிடல் ரூபா 389,722,862 ஆக இருந்த போதிலும் அதில் ரூபா 270,996,446 தொகை அதாவது 70 சதவீதம் மாத்திரம் ஆண்டில் அறவிடப்பட்டிருந்தது. | சிட்டையிடப்பட்ட ஆதன வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆதன வரி செலுத்தும் போது சில ஆதனங்களின் உரிமையாளர்கள் ஆண்டின் ஆரம்பத்தின் போது செலுத்தியிருந்ததுடன், சில ஆதனங்களுக்காக சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதன வரி ரூபா 256,588,352 தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆதன வரி நிலுவை ஆதனங்களுக்காக சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டு ஆதனங்களை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிலுவை ஆதனங்களுக்கு இடையே நகர சபைக்குச் சொந்தமான ஆதனங்களும் உள்ளடங்கியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டில் 424 ஆதனங்களுக்காக சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டு ரூபா 122,178,483 தொகையான நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு எதிர் பார்க்கப்பட்ட போதிலும், சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த 126 ஆதன வரி அலகுகளில் இருந்து எந்தவொரு தொகையும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டு வருமான பரிசோதகரினால் ஆதன வரி அறவிடுவதற்கு உச்ச அளவில் முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. சில அறிவித்தல் கிடைக்கப் பெற்றவர்கள் தண்டப்பணத்துடன் கொடுப்பனவு செய்த சந்தர்ப்பங்களும் உள்ளன. |
| (iv) | ஆதன வரி அறவிடுவதற்காக சிவப்பு அறிவித்தல் வழங்கும் போது இனங்காண முடியாதிருந்த 51 ஆதனங்களில் இருந்து அறவிட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 10,753,733 ஆகும். | ஆதனங்களை இனங்கண்டு நிலுவை பணம் அறவிடப்பட வேண்டும். | இனங்காண்பதற்கு முடியாதிருந்த ஆதனங்களை இனங்காண்பதற்காக மதிப்பீட்டு பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**(ஆ) கழிவுப் பொருள் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வியாபார நிலையங்களுடன் உடன்படிக்கை செய்யப்படாதிருந்தமையினால் நிலுவை கழிவுப் பொருள் கட்டணம் தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்க முடியாதிருந்தது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கழிவுப் பொருள் வருமானம் ரூபா 13,427,850 ஆகும். | நிலுவை கழிவுப் பொருள் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடன்படிக்கை செய்வதற்காக வரைவு உடன்படிக்கையொன்றை தயாரிப்பதற்கு சட்ட உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் வியாபார நிலையங்களுடன் உடன்படிக்கை செய்வதற்காக தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(இ) விநோத வரி (சினிமா மண்டபம்)**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 சினிமா மண்டபங்களில் இருந்து விநோத வரி அறவிடப்படாதிருந்ததுடன், | விநோத வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை | உரிய நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்ட போதும், |

| | | |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகள் முதல் கொண்டு வரப்படுகின்ற நிலுவை ரூபா 154,302 தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். | சினிமா மண்டபங்களில் இருந்து கிடைத்துள்ள பதில்கள் திருப்திகரமாக இல்லாதிருந்ததுடன், பத்மா சினிமா மண்டபத்தில் இருந்து ரூபா 9,000 தொகை கிடைக்கப் பெற்றுள்ளது. நிலுவை வருமானத்தை சேகரித்துக் கொள்வதற்கு வருமான பரிசோதகர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(ஈ) ஏனைய வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கேபில் ரீ.வீ. வருமானம் ரூபா 4,718,601 தொகை, விஷேட விளம்பர அறிவித்தல் நிலுவை ரூபா 10,490,318 மற்றும் விஷேட விளம்பர அறிவித்தல் (வீதி பெயர் பதாதை) நிலுவை ரூபா 1,500,000 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை கேபில் ரீ.வீ. வருமானத்தை உரிய நிறுவனம் சபையுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையில் இருந்து விலகியமையினால் அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன், அந்த நிறுவனத்துடன் உடன்பாட்டிற்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வீதி பெயர் பதாதை ரூபா 1,500,000 தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**2.3.4 வாடகை**

**(அ) கடை வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 152 கடைகளின் நிலுவை கடை வாடகை ரூபா 8,682,115 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், 03 மாதங்களுக்கு மேற்பட்ட நிலுவை வாடகை காணப்படுகின்ற கடைகளும் காணப்பட்டன. | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக தொடர்ந்தும் வருமானப் பரிசோதகர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு முதல் காணப்பட்ட இறைச்சிக் கடை நிலுவை மீதி ரூபா 2,471,517 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை இறைச்சிக் கடை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கலப்பு வருமான பிரிவின் பேரேட்டு இவ்வாறாக முன் கொண்டுவரப்பட்ட மீதியொன்று காணப்படாதிருந்தமை பேரேட்டு அவதானிப்பின் போது காணப்பட்டது. |

**(ஆ) ஆதனங்களை வாடகைக்கு வழங்குதல். (பிணை முறி)**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான சிட்டையிடல் ரூபா 1,063,700 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 123,631 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | சிட்டையிடப்பட்ட வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், நிலுவை வருமானம் உள்ள கடைகளுக்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| (ii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 14 ஆதனங்களின் நிலுவை ஆதன வாடகை ரூபா 5,410,402 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிலுவையாக உள்ள கடைகளுக்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான சிட்டையிடல் ரூபா 13,698,500 ஆக இருந்த போதிலும், அதில் ஆண்டில் அறவிடல் ரூபா 5,630,461 ஆகும். | சிட்டையிடல்களை ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வியாபார வரி செலுத்தாதுள்ள வியாபாரங்களுக்காக வருமான பரிசோதகர் பிரிவின் மூலம் வழக்கு நடவடிக்கைகளின் ஊடாக அந்த வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கைத்தெழில் மற்றும் | வரி அறவிட வேண்டிய நிலையங்கள் | வியாபார வரி வருமானத்தை மதிப்பீடு செய்யும் போது ஒரு கட்டிடத்தில் பல மாடிகள் |

| | | |
|---|---|---|
| வியாபார வரி மீதி ரூபா 86,815,517 ஆக இருந்த போதிலும், அதில் ஆண்டின் போது ரூபா 3,762,091 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | சரியான பிரகாரம் இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ள சந்தர்ப்பங்களின் போது அந்த கட்டிடங்களில் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், ஒரு வியாபாரமாகவே பேணிச் செல்லப்படுகின்றது |

### 2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

#### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 முதல் 2019 திசெம்பர் 31 வயையான காலப்பகுதிக்குரிய நீதிமன்றத்தின் மூலம் அறவிடப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 107,592,699 தொகையை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணத்தை அறவிடும் திட்ட முறைமையின் பிரகாரம் மேல்மாகாண சபையிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானம் மற்றும் மாநகர சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் என்பவற்றை தனித்தனியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.3.7 மிகை கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டில் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,563,042 தொகை அறவிட வேண்டியிருந்தது. | மிகைக் கட்டண மீதியை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 04 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய இலக்குகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டவுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக் கொள்ளப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வனரத்தன வீதி முதல் பொன்சேகா வீதி வரையான காணிகளை கைப்பற்றுவதற்காக 2018 பெப்ரவரி மாதம் ரூபா 4,500,000 தொகை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், 2019 ஆண்டின் இறுதி வரையிலும் காணியை கைப்பற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், 02 குடும்பங்களுக்கு மாத்திரம் நேர் நுழைவு வாயிலை பெறுவதற்காக இந்த வீதியை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட செலவினத்தை ஒப்பீடு செய்யும் போது கிடைக்கின்ற நலன்கள் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | மிகவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காக நிதியம் ஈடுபடுத்தப்பட வேண்டும். | பொதுச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

**(இ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 49,816,618 பெறுமதியான 06 செயற்திட்டங்கள் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ii) | பிரேசர் விளையாட்டரங்கில் உள்ள விளையாட்டரங்கை | செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு | பிரேசர் விளையாட்டரங்கின் நிர்மாண நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணித்தல் மற்றும் தெஹிவளை பொது விளையாட்டரங்கின் உள்ளக விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 50,000,000 மற்றும் ரூபா 60,000,000 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 110,000,000 செலவினம் ஒன்று 2018 இன் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இந்த வேலைகள் இரண்டினதும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், தெஹிவளை பொது விளையாட்டரங்கின் உள்ளக விளையாட்டரங்கின் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டுகின்றது. |
| (iii) | 2018 ஆம் ஆண்டில் வீதி விளக்கு மெய்மெய்யாய்வு நடவடிக்கைகளுக்காக ரூபா 1,500,000 செலவினம் ஒன்று நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலம் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மெய்மெய்யாய்வு நடவடிக்கைகள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். | நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதும் சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெறாதிருந்தமையால் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்கு முடியாதிருந்தது. |
| (iv) | 2018 ஆம் ஆண்டின் போது Skid Steer Loader இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 6,195,000 செலவினம் ஒன்று நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | கொள்வனவுகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | மீண்டும் இயந்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான கேள்வி 2020.07.16 ஆம் திகதி திறக்கப்பட்டிருந்ததுடன், எதிர் காலத்தில் அதன் பிரகாரம் இயந்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. |

**(ஈ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கழிவுப் பொருட்களை சேகரித்தல் சரியான பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்படாமையினால் கலப்பு | கழிவுகளை சேகரித்தல் சரியான பிரகாரம் | வேறு பிரிக்கப்படாத கழிவுப் பொருட்களில் கலவை கழிவுகள் மற்றும் |

| | | |
|---|---|---|
| கழிவுப் பொருட்களுக்காக ரூபா 23,102,250 தொகை கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு மேலதிகமாக செலுத்த வேண்டிய எற்பட்டிருந்தது. | முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | வேறு பிரிக்கப்படாத கழிவுப் பொருட்கள் என 02 வகைகள் உள்ளடங்கியிருந்தமையினால் அதனை முறையான பிரகாரம் மேற்கொண்டிருக்கவில்லை. எனினும், தற்போது முறையான பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக கிடைக்க வேண்டிய உறுப்பினர் படி ரூபா 1,827,000 தொகை மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | உறுப்பினர் படி கால ரீதியில் மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2015 ஆம் ஆண்டிற்கு முன்பட்ட ஆண்டிற்குரிய மீளளிப்பு செய்யாத கொடுப்பனவுகளை பதிவழிப்பதற்கு மேல் மாகாண பிரதம செயலாளருக்கு பிரதியுடன் மேல்மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2013 முதல் 2016 ஆம் ஆண்டு வரை சம்பளமாக செலுத்தப்பட்ட ரூபா 124,425,530 தொகை உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் உரிய பணத்தை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் மீளளிப்பு செய்யப்படாத சம்பளங்களின் மீளளிப்பு நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவழிப்பதற்கும் எஞ்சிய தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (இ) | ரத்மலான விஷேட பொருளாதார நிலையத்தில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 82,425 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | பெறவேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019.03.28 ஆம் திகதி பொதுச் சபையின் 07(x) 59 ஆம் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்காக கோவை சட்ட உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்குரிய நிலுவை நீர் கட்டண பட்டியலுக்காக ரூபா 87,844 தொகை சபையினால் செலுத்தப்பட்ட | ஒழுக்காற்று விசாரணையை தாமதமின்றி பூர்த்தி செய்து நிலுவை | அவர்களின் ஒழுக்காற்று பரிசோதனை முடிவடையாதிருந்தமையினால்இந்த பணத்தை அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், உரிய உத்தியோகத்தரின் பணிக்கொடையிலிருந்து அறவிடுமாறு 2018 செப்தெம்பர் 04 ஆம் திகதிய கடிதத்தில் சபையினால் அறவிக்கப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பட்டியலை அறவிட வேண்டும். | முடியாதிருந்தது. |
| (உ) | 04 உத்தியோகபூர்வ இல்லங்கள் உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தை விஞ்சியிருந்த போதிலும், குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கோ அல்லது புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாதிருக்கும் போது தொடர்ந்தும் அந்த உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருப்பாளர்கள் குடியிருந்து வருகின்றனர். | உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தை விஞ்சியதன் பின்னர் குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கோ அல்லது புதிய உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சகல உத்தியோகபூர்வ இல்லங்களுக்காகவும் உடன்படிக்கைக் காலத்தை நீடிப்பதற்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை தயாரித்தல் தற்போது இடம்பெறுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஊ) | உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 52,920 பெறுமதியான பாதுகாப்பு கமரா முறைமை உத்தியோகபூர்வ இல்லத்தில் காணப்படவில்லை. | உத்தியோகபூர்வ இல்லங்களின் உடன்படிக்கையின் 09 வது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்னால் ஆணையாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பாதுகாப்பு கெமரா முறைமை பொருத்தப்பட்டுள்ளமை களஞ்சிய பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காமை அறிவிக்கப்பட்டிருந்ததுடன், களஞ்சிய பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பொருத்திகள் வீடுகளுக்கு கையளிக்கும் போது உள்ளக கணக்காய்வு பரிவின் உத்தியோகத்தருடன் அந்த பொருட்கள் பரீட்சிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது என அறியத்தருகின்றோம். |
| (எ) | பாதுகாப்பு சேவை உடன்படிக்கையின் பிரகாரம் 12 மணித்தியாலங்கள் சேவை பாதுகாப்பு கடமையின் பின்னர் கட்டாயமாக ஊழியர்கள் மாற்றப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக சில ஊழியர்கள் | பாதுகாப்பு சேவை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் அறிக்கையிடப்படாதிருந்தமையினால் உரிய கட்டணங்களை மாதாந்த பட்டியல்களில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்ச்சியாக 20 நாட்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | | என தயவுசெய்து அறியத்தருகின்றோம். |
| (ஏ) | 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,192,050 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக பெறுவனவு குறிப்பு (GRN) விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்யும் போது பொருள் பெறுவனவு குறிப்பு (GRN) விநியோகிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டவில்லை. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் 149 வெற்றிடங்கள் மற்றும் 02 மிகைகள் காணப்பட்டதுடன் அதில் சிரேஷ்ட நிலையில் அங்கீகரிக்கப்பட்ட 07 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக அவ்வப்போது மாகாண சபையில் கலந்துரையாடல் நடாத்தப்பட்ட போதும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கூறப்பட்ட அதிகார தரப்பினர் இது வரையிலும் தவறியிருந்தனர். |
| (ii) | 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட 45 ஊழியர்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட வேண்டும். | இந்த ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளம் மாகாண சபையினால் மீளளிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | சபையின் தேவைகளுக்காக அமைய அடிப்படையில் 2019 ஆம் ஆண்டின் போது 20 சுகாதார தொழிலாளர்களும், நாளாந்த அடிப்படையில் இரண்டு ஊழியர்களும் சேர்க்கப்பட்டு முறையே ரூபா 7,118,061 மற்றும் ரூபா 574,726 தொகைகள் சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட வேண்டும். | இந்த ஊழியர்கள் செயற்திட்டத்தின் பணிகளுக்காக மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதிகார பிரதேசத்தில் டெங்கு பெருகுவதை கட்டுப்படுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். கராஜில் வாகன |

| | | | |
|---|---|---|---|
| | | | மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவி மற்றும் பெலக் வேலையாளர் பதவிகளுக்காக இந்த ஊழியர்கள் இருவரும் அத்தியவசிய கடமைகளை மேற்கொள்கின்றமையினால் முறையாக சேர்க்கப்பட்டிருந்தனர். |
| (iv) | 07 பதவிகளுக்காக 11 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக ஒரு உத்தியோகத்தரும் அங்கீகரிக்கப்பட்ட பதவியினை விஞ்சி சேர்க்கப்பட்டிருந்தனர். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விஞ்சி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட முடியாது. | ஒரு நிர்வாக உத்தியோகத்தர் முழு நேரமாக சபை செயலார் பதவின் கடமைகளுக்காக பதிற்கடமையில் நியமிக்கப்பட்டமையினால் நிர்வாக உத்தியோகத்தர் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார். |
| (v) | மேல்மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் (பதில்) 2018 யூன் 07 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் 04 பதவிகளுக்காக மாத்திரம் 12 மாத உச்ச வரையரையின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்த முடியுமாக இருந்த போதிலும், அதற்கு முரணாக ஏனைய பதவிகளுக்காக 06 ஓய்வூதியகாரர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | புதிய ஆட்சேர்ப்புக்களில் நியமித்தல் மேற்கொள்ளப்படாத சுற்றாடலில் சபையின் நடவடிக்கைகளை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கு ஓய்வூதிய காரர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். |
| (vi) | பொது சுகாதார பரிசோதகர் சேவையில் II(ஆ) தரத்தின் உத்தியோகத்தர் ஒருவருக்கு MT 05 சம்பள அளவு முதல் சுகாதார கல்வி உத்தியோகத்தர் பதவி பெற்றதன் பின்னர் அவருக்கு உரித்தாக வேண்டிய சம்பள அளவு MN 06 ஆக இருக்க வேண்டிய போதிலும், SL 01 சம்பள அளவு மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்தது. | குறித்த சம்பள அளவில் வைக்கப்பட வேண்டும். | பொது சுகாதார பரிசோதகர் சம்பள அளவு MT-05 ஆகும். மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் SL 01 சம்பள அளவு வழங்கப்பட்டுள்ளது. எனினும், 2013 இல் பதவி அணியினர் மீளாய்வின் போது சம்பள முரண்பாடுகளை தீர்த்து வைக்கும் போது MN 06 சம்பள அளவு வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | | அந்த பரிந்துரையில் புதிய பதவியணியினர் சேர்த்தலுக்கும் உரியதாகும். இந்த சுகாதார கல்வி உத்தியோகத்தர்களின் நியமனம் 2006.07.15 ஆம் திகதிக்கு முன்னரிருந்து மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**(ஆ) ஒழுக்காற்று நடவடிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் சபையில் சேவையாற்றிய ஊழியர் ஒருவருக்கு 2013 முதல் 2015 வரை சம்பள அதிகரிப்பு வழங்கி சம்பளங்கள் திருத்தப்பட்டு நிலுவை சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டின் போது முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படாமல் வேலை நீக்கம் செய்யப்பட்டு 2016 திசெம்பர் 21 ஆம் திகதி முதல் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்தார். 2018 ஆகஸ்ட் 17 ஆம் திகதி முதல் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று பரிசோதனைகளை விரைவாக மேற்கொண்டு மிகுதி நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். | அவரின் ஒழுக்காற்று பரிசோதனை நடாத்திச் செல்லப்படுவதுடன், முறையான ஒழுக்காற்று பரிசோதனைக் குழுவில் எழுந்திருந்த பிரச்சினைகளின் அடிப்படையில் இந்த பரிசோதனை பூர்த்தி செய்யப்படாதிருந்ததாக அறிவிக்கப்படுவதுடன், பரிசோதனைகள் முடிவடைந்த உடன் உடனடியாக அவரின் பதவி உயர்வு மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |

**(இ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 592 ஊழியர்களிடம் இருந்து 10 வருடங்களை விஞ்சிய ரூபா 3,526,279 தொகையான கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன் காரர்களின் தற்போதைய முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை பெற்று சட்ட ரீதியான |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கைகளை எடுத்து அந்த கடன் பணத்தை அறவிடுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. தற்போது பிணையாளர்களைப் பெற்று இவ்வாறான நிலைமையில் எதிர் காலத்தில் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியம் பெற்றுச் சென்ற, வேலை நீக்கப்பட்ட, இடம் மாற்றலாகிச் சென்ற மற்றும் மரணமடைந்த 74 உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 4,982,811 தொகையை பிணைகாரர்களிடம் இருந்தோ அல்லது ஓய்வூதிய பணிக் கொடையிலிருந்தோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---

**(அ) வாடகை ஆதனங்கள்**

---

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சில ஆதனங்கள் தொடர்பாக அறவிடப்படுகின்ற வாடகை 05 வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை 05 வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் வாடகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், சில ஆதனங்களுக்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் சில உடன்படிக்கைகள் உடன்படிக்கை காலத்தை விஞ்சியிருந்தது. | ஆதனங்களுக்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள சில ஆதனங்கள் சபையின் அனுமதியின்றி உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | சபையின் அனுமதியின்றி உப வாடகைக்கு வழங்குதல் முடியாது. | உப வாடகைக்கு வழங்குதல் இடம் பெறவில்லை. |
| (iv) | வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சில ஆதனங்கள் தொடர்பாக உடன்படிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக நிலுவை வாடகை காணப்பட்ட போதிலும், சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந்த நிலைமையொன்று காணப்பட்டது. | வாடகை உடன்படிக்கைகளைய கால ரீதியில் திருத்துதல் வேண்டும். | இது தொடர்பாக இந்த குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (v) | சபை அனுமதி வழங்கியுள்ள விதத்தில் உடன்படிக்கை செய்யப்பட்ட வியாபாரங்கள் மாத்திரம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், தற்போது ஏனைய வியாபாரங்கள் செய்யப்பட்டு செல்லப்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | உடன்படிக்கை செய்யப்பட்ட வியாபாரங்கள் மாத்திரம் செய்யப்படல் வேண்டும். | புதிய உடன்படிக்கை செய்யும் போது இந்த வழுக்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) வியாபார நிலைய வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 209 கடைகளில் 152 கடைகளின் வாடகை நிலுவை காணப்பட்டதுடன் அநேகமான கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்ட போதிலும், வாடகையாளர்களுடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு சில உடன்படிக்கைகள் உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தை விஞ்வியிருந்த போதிலும், மீண்டும் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட வேண்டும். | இந்த நிலுவை வாடகையின் ஒரு பகுதியை செலுத்துவதற்கு அவர்கள் இணங்கியிருந்ததுடன், அந்த நிலுவைப் பணத்தை செலுத்தி முடிந்ததுடன் உடன்படிக்கை செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் என 35 ஆதனங்களின் உரித்தை உறுதிப்படுத்துதல் தொடர்பாக தேவையான உரித்துறுதி அல்லது கையளித்தல் கட்டளை காணப்படவில்லை. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களின் உரித்தை உறுதிப்படுத்த வேண்டியதுடன், அவற்றின் அளவை தீர்மானித்து இனங்காணப்பட வேண்டும். | இது தொடர்பாக தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் எதிர் காலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் எற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | காணி தொடர்பாக வருடாந்தம் மெய்மெய்யாய்வு ஒன்று நீண்ட காலம் முதல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், சபைக்குச் சொந்தமான காணிகள் ஏனைய நபர்களினால் அனுமதியற்ற வகையில் பிடித்து வைக்கப்பட்ட 05 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | சபைக்குச் சொந்தமான காணிகள் தொடர்பாக வருடாந்தம் மெய்மெய்யாய்வை வச் செய்து சொத்துக்களை பாதுகாத்தல் வேண்டும். | இது தொடர்பாக தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் எதிர் காலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் எற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | சபையின் சொத்தொன்றான தெஹவளை எதிரிவீர வீதியில் வட்டபோவத்தை, கோன்கஹவத்தை காணி 4.94 பேர்ச் ஆக இருந்ததுடன் அதில் பயன்படுத்தப்படாத கிணறொன்று இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும், அதில் கிணறொன்று காணப்படவில்லை. அந்த வெற்றுக்காணியை சுற்றி பாதுகாப்பு வேலியொன்று இடப்படாதிருந்துடன் அருகில் உள்ள பிரதேச வாசியினால் கட்டிடங்களில் அகற்றப்பட்ட கழிவுப் பொருட்கள் மற்றும் அசுத்தப் பொருட்களுக்காக இந்த இடம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களுக்காக பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 3.5.2 சொத்துக்களில் இருந்து கிடைக்க வேண்டிய வருமானம் பெற்றுக் கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 01 ரூட் 4.19 பேர்ச் அளவான கல்கிஸ்ஸ வத்தை என்ற பெயரிலான காணி வெளித்தரப்பினரால் அனுமதியின்றி உரிமை கோராடப்பட்டிருந்தது. | அனுமதியின்றி உரிமை கோரப்படுகின்ற தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | கல்கிஸ்ஸ ஹோட்டல் வீதியில் 4/89 ஆம் இலக்க நிலவரைபட திட்டத்தில் 01 ரூட் 4.10 பேர்ச் அளவான காணி வாகனங்களை நிறுத்தும் இடமாக பயன்படுத்துவதற்காக கல்கிஸ்ஸ ஹோட்டலுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், இந்த ஆதனத்தை வாடகைக்கு வழங்கும் போது உடன்படிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இந்த ஆதனத்தின் நிலுவை வாடகை ரூபா 4,319,761 ஆக இருந்ததுடன், இந்த வாடகைப் பணத்தை வாடகையாளரிடமிருந்து அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | புதிய உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதற்கோ அல்லது திருத்தங்களைச்செய்து நிலுவை வாடகையை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பல வருடங்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை 2020 ஆம் ஆண்டின் போது காலாவதியாகுவதற்கு இருந்தது. அதன் பின்னர் மதிப்பீடொன்றை மேற்கொண்டு புதிய உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக எடுக்க வேண்டிய மிகுதி நடவடிக்கைகள் தொடர்பாக சட்ட ஆலோசனையை பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | வாடகை ஆதனங்களை உப வாடகைக்கு வழங்குதல் நகர சபையின் அனுமதியின்றி வாடகையாளர்களால் மேற்கொள்ளப்பட முடியாதிருந்த போதிலும், வாடகைக்கு பெற்றுள்ள ஆதனமொன்றை ஏனைய தரப்பினருக்கு உப வாடகைக்கு வழங்கி நகர சபை உறுப்பினரால் நகர சபைக்கு செலுத்துகின்ற வாடகையை விட கூடுதலான வாடகையொன்று அறவிடப்பட்டிருந்து. மேலும் நகர சபை பதிவேட்டின் பிரகாரம் 2019 திசெம்பர் 30 இல் உள்ளவாறு ரூபா 435,340 நிலுவையொன்று காணப்பட்டது. | நகர சபையின் அனுமதியின்றி ஆதனங்களை உப வாடகைக்கு வழங்கல் மேற்கொள்ளப்பட முடியாது. | அதனை அறவிடல் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

### 3.5.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரேசர் மாவத்தையில் அமைந்துள்ள 19.10 பேர்ச் அளவான காணி அனுமதியின்றி உரிமை கோராடுபவரிடம் இருந்து மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக 1999 ஆகஸ்ட் 27 ஆம் திகதி வழக்கு தொடரப்பட்டுள்ளது. | அனுமதியின்றி உரிமை கோராடுபவரிடம் இருந்து ஆதனத்தின் உரித்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. |

### 3.5.4 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மூடப்பட்ட மற்றும் முத்திரை வைக்கப்பட்ட 19 கடைகளை மீண்டும் கையேற்று வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது வாசபத்த கலைக்கப்பட்டு முத்திரையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) கழிவுப் பொருட்களை சேகரிக்கின்ற வாகனமொன்று 09 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. | பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 2,346,088 செலவில் படோவிட்ட 05 ஆம் கட்ட விழா மண்டபம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விழா மண்டபத்தை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | களஞ்சிய உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்ட சுகாதார தொழிலாளியினால் 2017 நவம்பர் முதல் 2018 ஆகஸ்ட் வரை பொருட்கள் விநியோகித்தல் கட்டளைப் பத்திரம் மாற்றப்பட்டதன் மூலம் சபைக்கு ஏற்பட்ட ரூபா 131,475 தொகையான நட்டம் தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 156 இன் பிரகாரம் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக அரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு உரிய நபருக்கு குற்றப்பத்திரமொன்று அனுப்பப்பட்டிருந்ததுடன் , உரிய பணத்தை அவரிடம் இருந்து அறவிடுவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2011 நவம்பர் 11 ஆம் திகதி முதல் 2016 ஏப்ரல் வரை சேவையை விட்டுச் சென்ற ஊழியர் ஒருவருக்காக ரூபா 1,413,903 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வயிலும் அந்த பணத்தை மீள அறவிடுவதற்கு முடியாதிருந்தமையால், கல்கிஸ்ஸ பிரதான நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. மேலும், செலுத்தப்பட்ட தேறிய சம்பளத்திற்கு மேலதிகமாக விதவைகள் அனாதைகள் நிதியத்திற்கு ரூபா 44,983 தொகை மற்றும் காப்புறுதி தவணையாக ரூபா 6,050 தொகை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது வரை அந்த வழக்கு விசாரணையில் உள்ளது. |
| (இ) | 2019 நவம்பர் 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ரூபா 145,470 தொகையான ஆதன வரி மோசடி தொடர்பாக நட்டத்தை அறவிடுவதற்கும், ஒழுக்காற்று விசாரணைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 156 இன் பிரகாரம் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய ஊழியருக்கு எதிராக கல்கிஸ்ஸ பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணையொன்று நடைபெறுவதுடன், திணைக்கள மட்டத்தில் குற்றபத்திரிகை |

| | | |
|---|---|---|
| | | விநியோகிக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

**3.7 வெளிப்படையான மோசடிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஸ்ரீ ஜயவர்தன புர பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்பட்ட கழிவுப் பொருட்கள் கரதியான கழிவுப் பொருள் தளத்திற்கு அனுமதியின்றி அகற்றுதல் தொடர்பாக கெரியர் பூம் வாகனத்தின் சாரதியின் சேவை நீக்கப்பட்டு 2019 மே 29 ஆம் திகதிய ஆரம்ப விசாரணை அறிக்கையின் பிரகாரம் சபைக்கு ஏற்பட்ட நிதி ரீதியான நட்டம் கணிப்பீடு செய்யப்பட்டு எதிர்காலத்தில் சம்பளத்தில் இருந்து அறவிடுவதன் அடிப்படையில் 2019 யூன் 17 ஆம் திகதி மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். இந்த அனுமதியற்ற கழிவுப் பொருள் அகற்றுதலுக்காக ஏற்பட்ட நட்டம் ரூபா 229,623 தொகை ஆக கணிப்பிடப்பட்ட போதிலும், உள்ளபடியான நட்டம் இதற்கு மேலதிகமாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | நிதி ரீதியான நட்டம் கணிப்பிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியரிடம் இருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட தொகை போதியளவில் இல்லாமையினால் நிதி செயற்குழுவின் போது மேலும் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சுகாதார கட்டுப்பாட்டாளரினால் நகர சபையின் டெக்டர் வாகனம் ஈடுபடுத்தப்பட்டு கோட்டே நகர சபைக்குரிய பிரதேசங்களில் கழிவுப் பொருட்கள் சேகரித்து கணிசமான அளவில் பணம் உழைத்தல் மற்றும் வெளிப்படையான மோசடிகள் மேற்கொள்ளப்பட்டமை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் இது தெடர்பாக எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விசாரணையொன்று மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விசாரணை மேற்கொள்ளப்பட்டதுடன் அறவிட வேண்டிய பணம் தொடர்பாக சபையில் கலந்துரையாடப்பட்டு சுகாதார கட்டுப்பாட்டாளர் இடமிருந்து அறவிடுவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 4. தீர்வுகாணப்படாத அவதானிப்புகள் மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்குரியதாக விநியோகிக்கப்பட்ட 14 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக 2020 மே 20 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கால எல்லையில் பதிலளிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படாத 09 ஐய வினாக்கள் காணப்பட்டதுடன், அதில் 05 இற்கு வரைவு பதில் தயாரித்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மிகுதி 04 இற்கும் பதில் தயாரிக்கப்படுகின்றது. |